மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்தக் கோவிலைச் சேர்ந்த சொத்தின் மதிப்பு விபரம் என்னிடம் இல்லை. ஆனால் ஆண்டு வருமானம்—இந்த ஆண்டு வருமானம் ரூ. 19,604. இந்தக் கோவிலுக்கு அறங்காவலர்கள் யாரும் நியமிக்கப்பட வில்லை. சன்மார்க்க சம்வர்த்தினி சபையினர் பரம்பரையாக இந்தக் கோவில் நிர்வாகத்தைக் கவனித்து வருவதாகச் சொல்லப் படுகிறது. தற்சமயம் அவர்கள் தான் அறங்காவலர்களாக இருக் கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, சென்னையிலே இன்னும் பல கோவில்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட வில்லை. பைராகி மடம் என்ற ஒரு பெரிய கோவில் இருக்கிறது. அங்கே இரண்டு வருடங்களுக்கு மேலாக டிரஸ்டிகள் நியமிக்கப் படவில்லை. ஆகவே, உடனடியாக அந்தக் கோவிலுக்கு டிரஸ்டி களை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஆண்டு கணக்கில் எந்தக் கோவிலிலும் அறங்காவலர்கள் நியமிக்கப் படாமல் இல்லை. சில கோவில்கள் சம்பந்தமாக வழக்குகள் நீதி மன்றத்தில் இருப்பதினாலோ அல்லது வேறு சில தகராறுகளி னாலோ அறங்காவலர்கள் நியமிக்கப்படாமல் இருக்கலாம். ஆனால் அம்மையார் அவர்கள் குறிப்பிடும் கோவிலில் அறங்காவ லர்கள் நியமிக்கப்படவில்லை என்ற தகவல் தற்போது என்னிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(3) அறிவிப்பு

பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப் பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி விவரமும், 1972–73-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பிற்காக ஒதுக்கப்பட்ட நாட்களின் விபரமும் ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அச்சிட்டு அனுப்பியுள்ளவாறு நடைபெறும்.